03.07.2025
Elec.OP.No.164/2022
**ம.சா.1 – தாமோதரன்**

**<u>2–ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணையின் தொடர்ச்சி :–</u>**

என் பெயரிலும் குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றால், இருந்தது 2024–ஆம் ஆண்டு முடிந்துவிட்டது. குற்ற வழக்கு சம்பந்தமாக நான் என்னுடைய படிவத்தில் தெரிவித்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை. என்னுடைய வேட்பு மனுவையும் 2–ஆம் எதிர்மனுதாரருடைய வேட்பு மனுவும் முறையாக பரிசீலனை செய்யப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. 2–ஆம் எதிர்மனுதாரர் மீதான குற்றவியல் வழக்குகள் என்ன ஆனது என்று தெரியுமா என்றால் ஒரு சில வழக்குகளில் தண்டனை பெற்றுள்ளார், ஒரு சில வழக்குகளில் விடுதலை பெற்றுள்ளார். எந்த வழக்கில் விடுதலை பெற்றுள்ளார், எதில் தண்டனை பெற்றுள்ளார் என்று தெரியுமா என்றால், கொலை வழக்கில் விடுதலை பெற்றுவிட்டதாக சொன்னார்கள், ஒரு வழக்கில் இரண்டு ஆண்டுகள் சிறை தண்டனையும் மூவாயிரம் ரூபாய் அபாரதம் விதித்ததாகவும் சொன்னார்கள். அதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை. வேட்பு மனு பரிசீலனையின்போது எந்தவொரு ஆட்சேபனையும் யாரும் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். தேர்தல் ஆரம்பித்ததிலிருந்து முடிவு அறிவிப்பு வரை எந்தவொரு ஆட்சேபனையும் செய்யாமல், 2–ஆம் எதிர்மனுதாரர் தலைவர் பொறுப்பிற்கு வந்த பிறகு, அவரிடம் பணம் பறிக்க வேண்டும் என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2–ஆம் எதிர்மனுதாரர் மீது நிலுவையில் இருந்ததாக சொல்லும் அனைத்து வழக்குகளிலும் அவர் விடுதலையாகிவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. எந்தெந்த வழக்குகள் நிலுவையில் உள்ளது, எதில் தண்டனை பெற்றுள்ளார் என்ற விவரத்தை ஆவணமாக இந்த வழக்கில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் ../

முடியும். நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை :</u>** இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

(Sd/- M. Christopher)
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.